# அபிவிருத்தி லொத்தர் சபை

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

**(1997ஆம் ஆண்டின் 20ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது)**

DLB DEVELOPMENT LOTTERIES

**அபிவிருத்தி லொத்தர் சபையில் நிலவும் பின்வரும் பதவிக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**01. பிரதான பாதுகாப்பு அதிகாரி பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்**

| | |
|---|---|
| பதவியின் பெயர் | : பிரதான பாதுகாப்பு அதிகாரி |
| வெற்றிடங்களின் எண்ணிக்கை | : 01 |
| சம்பள வகுதி | : JM 1-1-2025 |
| சம்பள அளவு | : ரூபா 72,650 - 10x1,360 - 18x2,040 - 122,970 (முகாமைத்துவச் சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபம்) |
| மாதாந்த ஒப்பந்த சம்பளம் | : JM 1-1-2025 சம்பள அளவிற்குரிய சம்பள அளவான ரூபா 69,387.00 மற்றும் நிதி அமைச்சினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் |

**02. கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளை ஆட்சேர்த்தல் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அத்துடன் அரச பாதுகாப்புப் பிரிவின் பதவிநிலை மட்டப் பதவியொன்றில் 03 வருட கால சேவைக்குப் பின்னரான அனுபவம்.

அல்லது

(2) முப்படை சேவையில் இருந்து முறையாக ஓய்வுபெற்ற மேஜர் பதவி அல்லது அதற்கு மேலான பதவியொன்றை வகித்த அதிகாரியாகவிருத்தல்.

அல்லது

(3) பொலிஸ் சேவையில் இருந்து முறையாக ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர் பதவி அல்லது அதற்கு மேலான பதவியொன்றை வகித்த அதிகாரியாகவிருத்தல்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**03. நிதி அனுகூலங்கள்:**

I. முகாமைத்துவ சேவை 01/2025ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் **JM 1-1** பதவிக்குரித்தான சம்பளம்

II. நிதி அமைச்சினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ஏனைய கொடுப்பனவுகள் (ஊக்குவிப்புக் கொடுப்பனவு, வருகை கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி)

III. ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% நிறுவனத்தினால் செலுத்தப்படும்.

IV. மாதாந்தம் 125,000.00 ரூபா வரை உழைக்கலாம் என்பதுடன் இது மாதாந்தம் மாறுபடும்.

**04. பொது நிபந்தனைகள் :**

| | | |
|---|---|---|
| **I.** | நியமனத்தின் தன்மை | : ஒப்பந்த அடிப்படையில் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துவத்துடன் |
| **II.** | ஏனையவை | : சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும். பதவிக்காக ஒப்படைக்கப்படும் கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதோடு நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உள மற்றும் உடல் ரீதியிலான தகுதியுடையவராகவிருத்தல் வேண்டும். சிறந்த நன்நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும். |
| **III.** | ஆட்சேர்க்கும் முறை | : நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகை அல்லது பிரசித்த விளம்பரமொன்றைப் பிரசுரிப்பதன் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அந்தப் பதவிக்கு இயைபான வகையில் எழுத்து மூலப் போட்டிப் பரீட்சை அல்லது / மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் (வாய் மூலம் / எழுத்து அல்லது செயன்முறைப் பரீட்சை) அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். |

**IV. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் : 2025-06-05.**

அனைத்துக் கல்விச் சான்றிதழ்கள், தொழில்சார் தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள் மற்றும் சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் சான்றுபடுத்திய பிரதிகள் சகிதம் விண்ணப்பதாரினால் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 2025-06-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். அல்லாவிடில் விண்ணப்பப் படிவத்தை அபிவிருத்தி லொத்தர் சபையின் மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடல் வேண்டும். அமைச்சுகள் / திணைக்களங்கள் / ஏனைய அரச நிறுவனங்களில் சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் நிறுவனத்தின் தலைவரின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர் / பிரதான நிறைவேற்று அதிகாரி,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,**
**யூனியன் பிளேஸ், கொழும்பு 02.**